


Metro லீடர்
# மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

CN ceynews
www.ceynews.lk


லீடர்: 03 | இதழ் -259 | 30.01.2023 | பக்கங்கள்: 06 | editorml21@gmail.com | விலை: 50/-

# தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர் முஹம்மட்டுக்கு கொலை அச்சுறுத்தல்!



## பாதுகாப்பை பலப்படுத்துங்கள்:





### நிமல் புஞ்சிஹேவா ஜனாதிபதிக்கு கடிதம்

தேசிய தேர்தலை ஆணைக்குழுவின் உறுப்பினரும் முன்னாள் தேர்தல் ஆணையாளருமான எம்.எம்.மொஹமட்டுக்கு தொலைபேசியூடாக குலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டு ள்ளதாக அவர் மெட்ரோ லீடர் பத்திரிகைக்கு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய தேர்தலை ஆணைக்குழுவின் உறுப்பினர் பதவியிலி ருந்து தன்கை விலகுமாறு கோரியே தொலைபேசி 02

## பெப்ரவரி 20 முதல் 30 வரை தபால் வாக்களிப்பு!



உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி 02

## இலங்கைக்கு சவூதி, குவைத் ஆதரவு!

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தையை இறுதி செய்யும் வகையில், சீன அரசாங்க தலைவர் களுடன் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, நேரடி பேச்சுவார்த்தை 02

## 13க்கு தலைசாய்த்த மஹிந்த ராஜபக்ஷவிற்கு புத்தி சுயாதீனம் இல்லை

–சன்ன ஜயசுமண–



13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் ஜனாதிபதியின் யோசனைக்கு, புத்தி சுயாதீனத்துடன் இருந்தால் மஹிந்த ராஜபக்ஷ இணக்கம் 02

## 225 எம்.பிக்களுக்கும் புதிய வரிகள் பொருந்தும்

-நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய–



225 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் புதிய வரிகள் பொருந்தும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலா பிட்டிய தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் 02

## தேர்தல் வர்த்தமானி அறிவித்தலுக்கு ஆணைக்குழு உறுப்பினர்களின் கையெழுத்து தேவையில்லை



–தலைவர் நிமல் புஞ்சிஹேவா–

உள்ளூராட்சி சபைத் தேர்தல் செயற்பாடுகளை ஆரம்பிப்பது தொடர்பான வர்த்தமானியில் தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் 02

## சுதந்திர தினத்தை புறக்கணிக்க த.தே.கூ. தீர்மானம்!



இந்த வருடம் சுதந்திர தினத்தை புறக்கணிக்க தமிழ் தேசிய கூட்டமைப்பு தீர்மானித்துள்ளது. தமிழ் மக்களுக்கு உரிய முறையில் இன்னும் சுதந்திரம் கிடைக்காத காரணத்தினால் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

## வாக்குகள் இல்லாததால் பணம் இல்லை என கூறுகின்றது அரசாங்கம்:

### மக்கள் விடுதலை முன்னணி

வாக்குகள் இல்லை என்பதனாலேயே உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கு அரசாங்கம் தயங்குவதாக மக்கள் விடுத லை முன்னணி தெரிவித்துள்ளது.

இருப்பினும் தேர்தலை நடத்துவதற்கு பணம் இல்லை என கூறி மக்களை ஏமாற்றுவதாக மக்கள் விடுதலை முன்ன ணியின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா தெரிவித்தார். 02

## முஸ்லிம் திணைக்களத்தின் பணிப்பாளராக முஹம்மத் பைஸல் பதவியேற்பு!



02

## தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்...

மற்றும் வட்ஸ்ஆப் ஊடாக கொலை அச்சுறுத்தல் வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதுவரையில் தான் பதவியை இராஜினமாச் செய்யவில்லை. இன்னும் தேர்ததல் ஆணைக்குழுவில் அங்கத்தவராக உள்ளேன். ஆனால் தான் பதவி விலகியதாக சிலர் சமூக வலைத்தலங்களில் பதிவிட்டுள்ளதாகவும் அது உண்மையல்ல எனவும் மொஹமட் தெரிவித்தார்.

தேசிய தேர்தலை ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு ஏற்பட்டுள்ள இக்கொலை அச்சுறுத்தல் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு விசேட கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு மரண அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளமையினால் அவர்களின் பாதுகாப்பை பலப்படுத்துமாறு இக்கடிதத்தில் கோரியுள்ளார்.

தேர்தலுக்கான சரியான சூழலை உருவாக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு இருக்கும் நிலையில் தான் இந்த கடிதத்தை அனுப்பியுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்துவதற்கு அனைத்து அரச அமைப்புகளின் ஆதரவைப் பெறுவதற்கு ஜனாதிபதியின் தலையீட்டையும் அவர் கோரியுள்ளார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான ஆணைக்குழுவின் முயற்சிகளுக்கு சில அரச நிறுவனங்கள் முழுமையாக ஆதரவளிக்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

எனவே ஆணைக்குழு தேர்தலை நடத்துவதற்கு தேவையான ஆதரவை, ஜனாதிபதி தலையிட்டு வழங்க வேண்டும் என நிமல் புஞ்சிஹேவா கோரிக்கை விடுத்துள்ளார்.

## பெப்ரவர் 20 முதல் 30 வரை

முதல 30ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

தபால் வாக்களிப்புக்கான விண்ணப்பங்களை ஏற்கும் பணி கடந்த 23ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவடைந்தது.

தபால் மூல வாக்களிப்புக்கு தேவையான அடிப்படை நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது

## இலங்கைக்கு சவூதி, குவைத்...

ஈடுபடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு மற்றும் நிதியளிப்புத் திட்டத்திற்கான ஆதரவை இந்தியா ஏற்கனவே தெரிவித்துவிட்டது.

இதன்படி 10 வருடங்களுக்கு கடன் தடைக்காலத்தையும், 15 வருட மறுசீரமைப்பையும் வழங்க இந்தியா உடன்பட்டுள்ளது.

கடந்த வாரம் ஜப்பான் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு பாரிஸ் கிளப் மூலம் ஆதரவை தெரிவித்தது.

எனினும் சீனாவின் ஏற்றுமதி-இறக்குமதி வங்கி, இலங்கையின் சர்வதேச நாணய நிதியத் திட்டத்துக்கு ஆதரவளிப்பதாகவும், இதன் அடிப்படையில் இரண்டு வருட கடன் தடையை வழங்க முடியும் என்றும் இலங்கையின் நிதியமைச்சிற்கு ஒரு கடிதம் அனுப்பியுள்ளது.

எனினும், இலங்கை தொடர்பான திட்டத்தைத் தொடர்வதற்கு சீனவின் முன்மொழிவு போதுமானதாக இல்லை என்று சர்வதேச நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்திற்குத் தெரிவித்துள்ளதாக அரசாங்கத்தின் உயர்மட்ட தரப்புக்கள் தெரிவித்துள்ளன.

அனைத்து கடன் வழங்குநர்களுக்கும் ஒரே மாதிரியான திட்டம் இருக்க வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் கூறியுள்ளது.

இந்த நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சீனாவின் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் தலையிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு ஆதரவை நீடிக்கும் அறிக்கையை பாரிஸ் கிளப் இந்த வாரம் வெளியிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பாரிஸ் கிளப், இலங்கைக்கு 10 வருட கடன் தடைக்காலத்தையும் 15 வருட கடன் மறுசீரமைப்பையும் முன்மொழிந்துள்ளது.

இது நாட்டின் நிதி சிக்கல்களை ஒழுங்கமைக்க போதுமான நேரத்தை வழங்கும். ஆதாரத்தின்படி, சவூதி அரேபியா மற்றும் குவைத் போன்ற பரிஸ் கிளப்பிற்கு வெளியே உள்ள பல நாடுகளும் இலங்கையின் கடன் மறுசீரமைப்பு திட்டத்திற்கு ஆதரவளிக்க ஒப்புக்கொண்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னணியில், இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, அடுத்த 6 மாதங்களில் கடன் மறுசீரமைப்பு பேச்சுவார்த்தைகளை நிறைவு செய்யும் என நம்புவதாக வெளிநாட்டு ஊடகமொன்றுக்கு தெரிவித்திருந்தார்.

## 13க்கு தலைசாய்த்த மஹிந்த ராஜபக்ஷ...

கம் தெரிவித்திருக்கமாட்டார் என சன்ன ஜயசுமண குறிப்பிட்டார்.

மக்கள் ஆணையற்ற ஜனாதிபதிக்கு 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் உரிமை கிடையாது என்றும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சன்ன ஜயசுமண தெரிவித்தார்.

அடுத்த தேர்தலை இலக்காகக் கொண்டே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க 13ஐ முழுமையாக நடைமுறைப் படுத்துவதாக தெரிவித்துள்ளாரே தவிர, தமிழ் மக்கள் மீது கொண்ட இரக்கத்தினால் அல்ல என்றும் குறிப்பிட்டார்.

உண்பதற்கு உணவின்றி மக்கள் தவித்துக் கொண்டிருக்கும் இந்த சந்தர்ப்பத்தில் இவ்வாறான கருத்துக்களை தெரிவித்து நாட்டில் வீண் பிரச்சினைகளை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டாம் என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்து தனக்கு தண்டனை கிடைத்து விடும் என்ற அச்சத்தில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதி கூறும் அனைத்திற்கும் தலையசைத்துக் கொண்டிருக்கின்றார் என சன்ன ஜயசுமண சாடினார்.

## 225 எம்.பிக்களுக்கும் புதிய வரிகள்...

சந்திப்பில் கலந்துகொண்டு தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

புதிய வரிகள் மக்களைப் பாதித்துள்ளதை தாங்கள் அறிவதாகவும் எவ்வாறாயினும் அரசின் வருவாயை அதிகரிக்கவே வரிகளை உயர்த்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அத்தோடு கடன் வழங்குனர் மற்றும் சர்வதேச நாணய நிதியமும் இதனை பரிந்துரைத்துள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு மானியங்கள், உதவிகளை வழங்குவதற்காக அதிக வருமானம் உள்ளவர்களுக்கு வரி விதிக்கப்படுகிறது என குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் நாட்டின் நிலைமை சீரடையும் போது, வரி விகிதங்களை மீள்பரிசீலனை செய்ய எதிர்பார்த்துள்ளதாக ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்

## தேர்தல் வர்த்தமானி அறிவித்தலுக்கு...

உறுப்பினர்கள் கையொப்பமிட வேண்டிய அவசியமில்லை என தேர்தல் ஆணைக்குழு இன்று (30) தெரிவித்துள்ளது.

மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர்களால் தேவையான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா கருத்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான வர்த்தமானி இன்று (30) அல்லது நாளை (31) அச்சிடுவதற்கு அனுப்பி வைக்கப்படுமெனவும் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்குத் தேவையான – தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மற்றும் ஏனைய உறுப்பினர்களின் கையொப்பங்களுடன் கூடிய வர்த்தமானி அறிவித்தல், அச்சிடுவதற்கு இதுவரை அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படவில்லை என அரசாங்க தகவல் திணைக்களம் நேற்று (29) தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

## வாக்குகள் இல்லாததால் பணம் இல்லை...

அவர்களுக்கு வாக்குகள் கிடைக்கும் என நம்பிக்கை இருந்திருந்தால் எப்படியாவது பணத்தை பெற்றுக்கொண்டு தேர்தலை நடத்தியிருப்பார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எவ்வாறாயினும் தற்போது வாக்குகள் இல்லை என உணர்ந்துள்ள காரணத்தினாலேயே அரசாங்கம் தேர்தலைக் கண்டு அஞ்சுவதாக டில்வின் சில்வா மேலும் தெரிவித்தார்.

## முஸ்லிம் திணைக்களத்தின் பணிப்பாளராக...

முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக செய்னுல் ஆப்தீன் முஹம்மத் பைஸல் இன்று (30) திங்கட்கிழமை உத்தியோகபூர்வமாக பதவியேற்றுக் கொண்டார்.

இலங்கை நிருவாக சேவையின் முதல்தர அதிகாரியான இவர் இலங்கை நிருவாக சேவையில் 19 வருடத்திற்கு மேலான அனுபவத்தையும் கொண்டவர்.

இவர் கேகாலை மாவட்ட ருவன்வெல்ல மற்றும் கலிகமுவ பிரதேச செயலகங்களில் உதவி பிரதேச செயலாளராகவும், கேகாலை மாவட்ட கமநல சேவைத் திணைக்களத்தின் உதவி ஆணையாளராகவும், கமநல சேவைத் திணைக்களத்தின் பிரதான காரியாலயத்தின் ஆணையாளராகவும் (அபிவிருத்தி), அரநாயக்க பிரதேச செயலாளராகவும் உயர் பதவிகளை வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மாவட்ட தமிழ் பேசும் சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில்

## ஓய்வுபெற்ற சமுர்த்தி முகாமையாளர்கள் கௌரவிப்பு




அம்பாரை மாவட்டத்தில் சமுர்த்தி முகாமையாளர்களாக கடமையாற்றி ஓய்வுபெற்றவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் வருடாந்த ஒன்றுகூடலும் இன்று (28) சனிக்கிழமை நிந்தவூர் அட்டப்பள்ளம் ரிலக்ஸ் கார்டன் ஹோட்டலில் இடம்பெற்றது.

அம்பாரை மாவட்ட தமிழ் பேசும் சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவரும் நிந்தவூர் பிரதேச செயலக தலைமைப்பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளருமான ஏ.சீ.அன்வர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இந்நிகழ்வில் ஓய்வுபெற்ற சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர்களான திருமதி அருந்ததி மகேஸ்வரன், எஸ்.எல்.எம். மசூர், எம்.எல். ஜாபிர், ஈ.யோகராஜா, எம்.ஏ. இமாமுதீன், எச்.எம்.ஏ.அலீம் ஆகிய ஆறு பேருக்கும் அதிதிகளினால் மாலை அணிவித்து, பொன்னாடை போர்த்தி, அவர்களுக்கான வாழ்த்துப்பா வாசித்து வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டமைக்காக அம்பாறை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸுக்கு அம்பாரை மாவட்ட தமிழ் பேசும் சமுர்த்தி முகாமையாளர்கள் சங்கத்தினரால் நினைவுப் பரிவு வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இதில் ஓய்வுபெற்ற சமுர்த்தி முகாமையாளர்கள் தங்களது கடந்த கால அனுபவங்களை பகிர்ந்து கொண்டனர்.

இதில் சமுர்த்தி முகாமையாளர்களின் கவிதை, பாடல், நகைச்சுவை உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகளுடன் முழுநாள் நிகழ்வாக பகற்போசத்துடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

**றியாத் ஏ. மஜீத்**





# போதைக்கு எதிரான கண்டன பேரணி

எஸ்.எம்.எம்.முர்ஷித்

போதையிலிருந்து எமது சமுகத்தையும் எமது பிரதேசத்தையும் பாதுகாப்போம் எனும் தொனிப்பொருளில் கண்டன பேரணி வெள்ளிக்கிழமை (27) செம்மண் ஓடையில் இடம் பெற்றது.

செம்மண்ஓடை பள்ளிவாயல்கள் சமுக நிறுவனங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் அதன் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம்.அப்துல் றகுமான் தலைமையில் இடம்பெற்ற இக்கண்டனப் பேரணியில் செம்மண்ஓடை பிரதேசத்தை சேர்ந்த குபா பள்ளிவாயல், தக்வா பள்ளிவாயல், பாரி பள்ளிவாயல், அஸ்ஸைப் பள்ளிவாயல், ஸபா பள்ளிவாயல்களில் இருந்து ஜும்ஆ தொழுகையின் பின்னர் ஊர்வலமாக வந்த மக்கள் செம்மண்ஓடை சாட்டோ மைதானத்தை வந்தடைந்ததும் கண்டனப் பிரகடனம் இடம் பெற்றதன் பின்னர் பொது மக்கள் கலைந்து சென்றனர்.






கண்டனப் பிரகடனத்தில் போதைப் பாவனையில் ஈடுபடுவோருக்கும் அவற்றினை விற்பனை செய்யும் நபர்களின் குடும்பத்தின் எந்தவிதமான நன்மை தீமைகளிலும் ஊர் பொதுமக்கள் கலந்து கொள்வதில்லை என்றும் அவர்கள் தொடர்பான தகவல்கள் தெரிந்தவர்கள் அவர்களை அடையாளப்படுத்த வேண்டும் என்று பிரகடனம் சம்மேளனத் தலைவரினால் வாசிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் வாழைச்சேனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் எம்.டி.டி.நிலங்க, வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ்.எம்.எல். ஆர்.பண்டார, வாழைச்சேனை பிரதேச சபை உறுப்பினர் ஏ.எல்.ஏ.கபூர், சிரேஷ்ட சட்டத்தரணி எச்.எம்.எம்.றாசிக் மற்றும் பள்ளிவாயல்களின் பிரதம இமாம்கள் உட்பட பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

## சாய்ந்தமருது கல்வி கோட்டத்தில் 75 மாணவர்கள் சித்தி

அஸ்ஹர் இப்றாஹிம்

அண்மையில் வெளியிடப்பட்ட தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் சாய்ந்தமருது கல்விக் கோட்டத்தில் 75 மாணவர்கள் புலமைப் பரிசில் பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளனர்

அதன் அடிப்படையில் சாய்ந்தமருது அல் ஹிலால் வித்தியாலயத்தில் 44 மாணவர்களும் , சாய்ந்தமருது அரசினர் முஸ்லிம் கலவன் (ஜீ.எம்.எம்.எஸ்) பாடசாலையில் 19 மாணவர்களும், சாய்ந்தமருது லீடர் எம்.எச்.எம்.அஷ்ரஃப் வித்தியாலயத்தில் 5 மாணவர்களும், சாய்ந்தமருது அல் கமருன் வித்தியாலயத்தில் 3 மாணவர்களும், சாய்ந்தமருது றியாலுல் ஜன்னா வித்தியாலயத்தில் 2 மாணவர்களும், சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஸம்ஸ் மகா வித்தியாலயம் மற்றும் சாய்ந்மருது எம்.எஸ்.காரியப்பர் வித்தியாலயம் ஆகியவற்றில் தலா ஒரு மாணவருமாக மொத்தம் 75 மாணவர்கள் வெட்டுப் புள்ளிக்கு மேல் பெற்று புலமைப் பரிசில் பெறுவதற்கு தகுதி பெற்றுள்ளதாக சாய்ந்தமருது கோட்ட கல்விப் பணிப்பாளர் என்.எம்.அப்துல் மலீக் தெரிவித்தார்.

## சாய்ந்தமருது அல்- கமறூன் வித்தியாலயத்தில் மூன்று மாணவர்கள் தெரிவு

எம்.என்.எம்.அப்ராஸ்

சாய்ந்தமருது அல்-கமறூன் வித்தியாலயத்தில், 2022 வெளியாகிய புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப்புள்ளிகளுக்கு மேல் பெற்று எம்.ஆர்.எம். ஷைஹான் சாதிர் (162), ஏ.ஆர்.எப்.ஹிபா பானு (149),எம்.ஏ.ஸஹ்ரா (147) ஆகிய 03 மாணவர்கள் சித்தியடைந்து உள்ளதுடன், மேலும் இப்பரீட்சைக்கு தோற்றிய 22 மாணவர்களில் அனைத்து மாணவர்களும்70 புள்ளிக்கு மேல் பெற்று சாய்ந்தமருது கோட்டமட்ட பாடசாலைகளில் முதலாம் இடத்தைப் பெற்று சித்தியடைந்துள்ளதாக பாடசாலையின் அதிபர் எம்.ஐ. நிபாயிஸ் தெரிவித்தார்.

மேலும் இம்மாணவர்களுக்கு கற்பித்த ஆசிரியர் ஏ.நஸ்ருதீன் மற்றும் ஏனைய ஆசிரியர்களுக்கும்



பாடசாலை சமூகம் சார்பாக பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் அதிபர் எம்.ஐ.நிபாயிஸ் தெரிவித்தார்.

## ஓட்டமாவடி கோட்டத்தில் வை.அஹமட் வித்தியாலய மாணவன் முதலாமிடம்



யூ.எல்.எம்.ஹாரிஸ்

இம்முறை வெளியாகிய தரம் -5 புலமைப்பரிசில பரீட்சை முடிவுகளின் அடிப்படையில் ஓட்டமாவடி கல்விக் கோட்ட பாடசாலைகளில் ஒன்றான வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலய மாணவன் மொஹமட் ஜெளீர் மஸ்ஹர் பைஸி என்ற மாணவர் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

குறித்த சாதனை மாணவரின் திறமையை பாராட்டுவதற்காக மட்டக்களப்பு மத்தி வலயக்கல்வி பணிப்பாளர் மொஹமட் அமீர் மற்றும் கல்வி அபிவிருத்திக்கான பிரதிக்கல்விப் பணிப்பாளர் மொஹமட் ரமீஸ் ஆகியோர் அண்மையில் பாடசாலைக்கு விஜயம் செய்து பாராட்டுக்களை தெரிவித்தனர்.

குறித்த மாணவர் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் கடமையாற்றி வந்த வைத்தியர் மொஹமட் ஜெளீர் என்பவரின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## புலமைப் பரிசில் பரீட்சையில் இருவர் சித்தி



திருகோணமலை கறுமலையூற்று முஸ்லிம் வித்தியாலயத்தில் 2022 புலமைப் பரிசில் பரீட்சையில் அனஸ் அம்னத் ஹானியா 150 புள்ளிகளையும், நூஸ்ரத் ஹம்தான் அகமட் 142 புள்ளிகளையும் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

இது பாடசாலை வரலாற்றில் முதன்முறையாக இரு மாணவர்கள் சித்துயடைந்து பாடசாலைக்கு பெறுமை சேர்த்துள்ளதாக பாடசாலை அதிபர் கே.எம்.எம்.நவாஸ் தெரிவித்துள்ளார்.

சித்தியடைந்த மாணவர்களுடன் பாடசாலை அதிபர் ஆசிரியர்களையும் காணலாம்.

## 75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு கல்முனையில் சிரமதானம்

எம்.என்.எம்.அப்ராஸ்

75 ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்புரைக்கு அமைய "வீட்டினையும் நாட்டினையும் சுத்தமாக்குவோம்" எனும் கருப்பொருளில் கல்முனை சமுர்த்தி வங்கி வலயங்களில் (09) மாபெரும் சிரமதான நிகழ்வுகள் இடம்பெற்றது.

இந்நிகழ்வானது கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத்தலியின் வழிநடத்தலிலும் தலைமை பீட சமுர்த்தி சிரேஸ்ட முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ்யின் ஆலோசனைக்கமைய கல்முனைக்குடி வங்கி வலய முகாமையாளர் மோசேஸ் புவிராஜ் தலைமையில் கடற்கரைபகுதி, பாடசாலைகள், மையவாடி மற்றும் பூங்காகளில் சிரமதானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்நிகழ்வில் சமுர்த்தி பயனாளி குடும்பங்கள் மற்றும் நலன் விரும்பிகள் என பலரும் தங்களது பங்களிப்பினை வழங்கி சிரமதான பணியில் ஈடுபட்டனர்.



ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளிலும் வழி நடத்துவோர்களாக சமுர்த்தி உத்தியோகத்தர்கள், கிராம சேவையாளர்கள்,பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கல்முனைக்குடி சமுர்த்தி வங்கியின் கட்டுப்பாட்டுச் சபை உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டு சிரமதான நிகழ்வில் ஈடுபட்டனர்.

## அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு முதற்தடவையாக தேசிய மக்கள் சக்தி போட்டி

இஸட்.ஏ.றஹ்மான்

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் ஏற்பதற்கன அனுமதி அரசினால் வழங்கப்பட்டதனால் இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்கள் என்பன வேட்பு மனுக்களை தாக்கல் செய்துள்ளன. இதே வேளை தேசிய மக்கள் சக்தி நாட்டின் அனைத்து உள்ளூராட்சி சபைக்களிலும் போட்டியிட்டுள்ளது.

அந்த வகையில் முதற்தடவையாக அட்டாளைச்சேனை பிரதேச சபைக்காக தேசிய மக்கள் சக்தி போட்டியிட தீர்மானித்து அதற்கான வேட்பு மனுககளை தாக்கல் செய்துள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கான 11 வட்டாரங்களான அட்டாளைச்சேனை 06 வட்டாரங்கள்,பாலமுனை 02 வட்டாரங்கள், ஒலுவில் 02 வட்டாரங்கள், திகவாபி 01 வட்டாரம் ஆகியவற்றில போட்டியிடுகிறது.

இலங்கை மக்கள் தற்போது அரசியல் மாற்றம் ஒன்றை எதிர்பார்த்துள்ளதால் தேசிய மக்கள் சக்தி அனைத்து உள்ளூராட்சி சபைக்களிலும் பிரதிநிதித்துவத்தைப் பெறும் வாய்ப்புள்ளதாக அரசியல் அவதானிகள் எதிர்பார்க்கின்றனர்.

# சாய்ந்தமருது பிரதேச செயலக நலன்புரி அமைப்பின்
# வருடாந்த ஒன்றுகூடலும் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பும்

சாய்ந்தமருது பிரதேச செயலக நலன்புரி அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடலும் உத்தியோகத்தர்கள் கௌரவிப்பு நிகழ்வும் நிந்தவூர் அட்டப்பள்ளம் இஸ்மாயில் மாஸ்டர் தோட்டத்தில் நேற்று (29) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

சாய்ந்தமருது பிரதேச செயலாளரும் பிரதேச செயலக நலன்புரி அமைப்பின் தலைவருமான எம்.எம். ஆஷிக் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீஸன் கலந்து கொண்டார்.

இதில் மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் எச்.வி.அனீஸ், பிரதம கணக்காளர் ஏ.ஆதம்பாவா, கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர் எம்.எஸ்.எம். சப்ராஸ், அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் எம்.ஏ.சீ.சபீர், சாய்ந்தமருது உதவி பிரதேச செயலாளர் எம்.ஐ. முவஃபிக்கா, கணக்காளர் ஜே.நுஸ்ரத் பானு, உதவி திட்டமிடல் பணிப்பாளர் கே.எல்.எம்.ஹமீட், தலைமைப் பீட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் ஏ.சீ.ஏ. நஜீம், நிர்வாக உத்தியோகத்தர் ஏ.சீ.எம். பளீல், நிதி உதவியாளர் ஏ.சி. முஹம்மட் , சமுர்த்தி முகாமையாளர்களான ஏ.எல். யூ.ஜுனைதா, எஸ்.றிபாயா உள்ளிட்ட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் இடமாற்றம், பதவியுயர்வு மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

இந்நிகழ்வில் உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களது பிள்ளைகளுக்கு இடையில் போட்டி நிகழ்ச்சிகள் இடம்பெற்றதுடன் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இதில் உத்தியோகத்தர்களினதும் அவர்களது பிள்ளைகளைகளினதும் கலை நிகழ்சிகள் இடம்பெற்றதுடன் பகற்போசனும் இடம்பெற்றது.













# அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின்
# 16 ஆவது வருடாந்த மாநாடும் பொதுக் கூட்டமும்

அஞ்சல் திணைக்கள உத்தியோகத்தர்கள் சங்கத்தின் 16ஆவது வருடாந்த மாநாடும் பொதுக் கூட்டமும் ஞாயிற்றுக்கிழமை (29) தலைவர் தேசயமான்ய யூ.எல்எம். பைஸர் தலைமையில் மாளிகைக்காடு பாவா றோயலி வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபதி காமினி விமலசூரிய கலந்து கொண்டதுடன் மத அனுஸ்டானம், மறைந்த அங்கத்தினர்களுக்காக ஒரு நிமிட மௌன அஞ்சலியுடன் வரவேற்புரை உப தலைவர் ஏ.எம்.அமீர் நிகழ்த்தினார்.

கடந்த வருடாந்த பொதுக்கூட்ட அறிக்கையை பொதுச் செயலாளர் எம்.ஜே.எம் சல்மான் மேற்கொண்டு வருடாந்த அறிக்கை மற்றும் தீர்மானங்களை அறிவித்தார்.

இதனை தொடர்ந்து வருடாந்த கணக்கறிக்கை பொருளாளர் ரீ.குணநாதன் சமர்ப்பித்து உரையாற்றினார். அம்பாறை அக்கரைப்பற்று பிரதேச அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.ஆர்.கே.ஜாகொட விசேட உரையாற்றினார்.

சங்கத்தின் தலைவர் தேசமான்ய யூ.எஸ்.எம். பைஸர் தலைமை உரையாற்றினார்.

சிலோன் மீடியா போரம் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் கௌரவ அதிதியாக கலந்து கொண்டு அஞ்சல் சேவையின் முக்கியத்துவம் தொடர்பில் உரையாற்றினார்.
அங்கத்தவர்களுக்கான நேரம் வழங்கப்பட்டது. தொடர்ந்து முன்னாள் பிரதி அஞ்சல் மா அதிபதியும்

தற்போதைய வாழைச்சேனை பிரதேச செயலாளருமான ஜெயானந்தி திருச்செல்வம் பொன்னாடை மற்றும் நினைவு சின்னம் கடந்த கால சேவைக்காக வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

பின்னர் நடப்பு வருடங்களுக்கான நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டதுடன் சங்கத்தின் UPDO NEWS எனும் செய்தி மடலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. அதிதிகளின் உரைகள் இடம்பெற்றதுடன் பாடல்கள் கௌரவிப்பு நன்றியுரை என நிகழ்வு நிறைவடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இவ்வைபவத்தில் தபால் தொலைத்தொடர்பு ஊழியர் சங்கம் ஒன்றிணைந்த அஞ்சல் தொழிற்சங்க முன்னணி ஏற்பாட்டாளர் தலைவர் சிந்தக பண்டார உள்ளிட்ட கிழக்கு மாகாண அக்கரைப்பற்று மட்டக்களப்பு அம்பாறை அஞ்சல் அத்தியட்சகர் பிரிவிலுள்ள தபால் அதிபர்கள் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தொழிற் சங்கங்கள் தான் சார்ந்த திணைக்களத்தின் வளர்ச்சிக்கும் அதன் அபிவிருத்திக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென முன்னாள் கிழக்கு மாகாண பிரதி அஞ்சல் மா அதிபரும் தற்போதைய வாழைச்சேனை பிரதேச செயலாளருமான திருமதி ஜெயானந்தி திருச்செல்வம் தெரிவித்தார்.









sportsml77@gmail.com

**SPORTS லீடர்**

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் மாணவர்களுக்கான ரக்பி பயிற்ச்சி





**–எம்.என்.எம்.அப்ராஸ், எம்.எம்.ஜபீர், எம்.வை.அமீர்–**

இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகத்திற்கு அண்மையில் விஜயம் செய்திருந்த பல்கலையின் வேந்தர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி பாயிஸ் முஸ்தபாவிடம் மாணவர்கள் விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் மாணவர்களுக்கான இரண்டு நாள் ரக்பி பயிற்சி (25) ஆரம்பமானது.

இப் பயிற்சிக்கான ஏற்பாடுகள் பல்கலைக்கழக உப வேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கரின் வழிகாட்டலின் கீழ் இலங்கை ரக்பி யூனியனின் அனுசரணையோடு தென்கிழக்கு பல்கலைக் கழக மைதானத்தில் ஆரம்பமானது.

வேந்தர் இலங்கை ரக்பி யூனியனின் தலைவர் றிஸ்லி இல்யாஸிடம் விடுத்த வேண்டுகோளுக் கிணங்க சர்வதேச தரம் வாய்ந்த பயிற்றுவிப்பாளர்களான வைப் குணரத்ன ஆனந்த கதுரி ஆராய்ச்சி (World Rugby Educator, Strength and Condition), சஞ்சையா அமுனுகம (Level – II Coach) சம்ரத் பெர்னான்டோ (World Rugby Coach of Match Official and Performance Analyst) ஆகியோர் பல்கலைக்கழகத்திற்கு வருகை தந்திருந்தனர்.

ஆரம்ப நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞான பீடத்தினுடைய சிரேஷ்ட விரிவுரையாளர், கிழக்கு ரக்பி யூனியனின் தலைவருமான கலாநிதி திருமதி சந்திரகாந்தன், கிழக்கு ரக்பி யூனியனின் பொதுச் செயலாளர் அலியார் பைஸர் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

இப்பயிற்சியில் பல்கலைக்கழகத்தை சமூகத்தோடு இணைக்கும் நோக்கில் கிழக்கு ரக்பி யூனியன் அங்கத்தவர்களுக்கும் வாய்ப்புக்கள் வழங்கபட்டிருந்தன.

இந்நிகழ்வில் சிறப்புரை நிகழ்த்திய இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழகதின் பதில் உபவேந்தரும் கலை மற்றும் கலாசார பீடத்தினுடைய பீடாதிபதியுமாகிய பேராசியர் எம்.எம்.பாஸில், பல்கலைக்கழக மாணவர்களுக்கு ரக்பி மற்றும் ஏனைய உடல்சார் விளையாட்டுக்களின் முக்கியத்துவம் பற்றியும் பல்கலைக்கழக மாணவர்கள் விளையாட்டுக்களில் ஈடுபடுவதன் மூலம் நேர்த்தி மிக்க உடல் வலிமையுள்ள கல்வியறிவுடைய சமுதாயம் உருவாக்கப்படும் எனவும், எமது ரக்பி அணியினர் எதிர்வரும் காலங்களில் பல்லைக்கழகங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்குபற்றுவதோடு மட்டுமன்றி தேசிய மற்றும் சர்வதேச போட்டிகளிலும் தமது திறமைகளை சிறப்பாக வெளிப்படுத்துவார்கள் எனவும் குறிப்பிட்டார்.

அத்துடன் இந்நிகழ்வினை ஏற்பாடு செய்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளையும் தெரிவித்தார்.

உப வேந்தரின் பணிப்புரைக்கமைய பல்கலைக்கழக உடற்கல்வி பதில் இயக்குனர் எம்.எல்.தாஹிரின் ரக்பி பயிற்சிக்கான முழு அனுசரனையும் வழங்கப்படுகின்றது.

மேலும் இந்நிகழ்வில் தென்கிழக்கு பல்கலைக்கழக உடற்கல்வி பயிற்றுவிப்பாளர்களான எஸ்.எம்.வீ.ஆஸாத் மற்றும் முகம்மது இக்பால் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

# கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் இல்ல விளையாட்டு போட்டியில் நிஸ்ரின் இல்லம் சம்பியனானது







**எம்.என்.எம்.அப்ராஸ், யூ.கே.காலித்தீன்,ஏ.எல்.எம். ஷினாஸ்–**

கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் தேசிய பாடசாலை) (2023) இல்ல விளையாட்டு போட்டியில் நிஸ்ரின் இல்லம் சம்பியனானது. கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரியின் இல்ல விளையாட்டு போட்டியின் இறுதி நிகழ்வுகள் கல்லூரி மைதானத்தில் அதிபர் யூ.எல்.எம்.அமீன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆர்.எம்.டி.ஜெயந்த ரத்னாயக்க கௌரவ அதிதியாக கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் லசந்த புத்திக, கல்முனை வலயக் கல்வி பணிப்பாளர் எம்.எஸ்.சஹ்துல் நஜீம், கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ரம்சின் பக்கீர் மற்றும் அதிதிகளாக இலங்கை தென்கிழக்கு பல்கலைக் கழகத்தின் பேராசிரியர் கலாநிதி சபினா இம்தியாஸ், கல்முனை பொலிஸ் நிலைய பலவித குற்றப்பிரிவு பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எம்.எல்.ரபீக், பாடசாலைகளின் அதிபர்கள்,ஆகியோர் கலந்து கொண்டனர்.

இல்லங்களுக்கிடையிலான விளையாட்டுப் போட்டிகள், அணிநடை, மைதான கண்காட்சி, வினோத உடை நிகழ்வுகள் இடம்பெற்றதுடன் போட்டிகளின் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு சான்றிதழ்கள், பதக்கங்கள் வெற்றிக் கிண்ணங்கள் என்பன கலந்து கொண்ட அதிதிகளினால் வழங்கி வைக்கப்பட்டது.

இல்லங்களின் வெற்றி முறையே நிஸ்ரின் (சிவப்பு நிறம்) 109 புள்ளிகளைப் பெற்று முதலாமிடத்தையும், சபரான் (மஞ்சள் நிறம்) 106 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும், வர்தா (பச்சை நிறம்) 104 புள்ளிகளைப் பெற்று மூன்றாமிடத்தையும் ஜெஸ்மின் (நீலம் நிறம்) 91 புள்ளிகளைப் பெற்று நான்காமிடத்தையும் பெற்றமை குறிப்பிடத்தக்கது. இதன் போது பிரதி, உதவி அதிபர்கள் ஆசிரியர்கள், கல்முனை வலயக் கல்வி அதிகாரிகள், கோட்டக் கல்வி அதிகாரிகள்,பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், இல்ல விளையாட்டுப் போட்டிகளுக்கான மத்திய குழு உறுப்பினர்கள், பழைய மாணவிகள், பிரமுகர்கள், பொதுமக்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.